தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆடி 23, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

2006 ஆகஸ்ட் 8, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு”

நீதி வழுவாமல் நன்மைகளைச் செய்து பிறருக்குப் பயன்படப் பணியாற்றுகிறவர்களின் நல்ல பண்பை உலகம் பாராட்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா எண் 11, திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.*

11—

விற்பனை மையம்

***519—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி நகரில் பட்டு நூல் விற்பனை மையம் ஒன்றை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தருமபுரி நகரில் பட்டு நூல் விற்பனை மையம் ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக வட தமிழ்நாட்டிலே தருமபுரியில் இன்றைக்கு அதிகமான பட்டு நூல் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அதுவும் தருமபுரியில் நூற்றுக்கும் மேற்பட்ட பட்டு நூல் உற்பத்தி ஆலைகள் நடைபெற்று வருகின்றன. இவர்கள் அனைவரும் காஞ்சிபுரத்தில் இருக்கின்ற பட்டு நூல் கொள்முதல் நிலையத்தில் கொண்டு வந்துதான் விற்பனை செய்ய வேண்டிய ஒரு நிலை உள்ளது. அதற்கு உரிய பாதுகாப்பும், பேருந்து வசதிகளும் சரியில்லாத காரணத்தினால் அங்கே இருக்கின்ற விவசாயிகளுடைய நலன் கருதி இந்த பட்டு நூல் விற்பனை மையத்தை தருமபுரியிலே துவங்க அரசு முன்வருமா என்பதை நான் தெரிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு நூல் விற்பனை, இன்றையதினம் தருமபுரியிலே தனியார் பல இடங்களிலே கொள்முதல் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கொள்முதல் செய்யும்போது அரசாங்கம் நிர்ணயித்திருக்கின்ற விலை, கர்நாடக மாநிலத்திலே எந்த விலைக்கு விற்கப்படுகிறதோ, காஞ்சிபுரம் கூட்டுறவுச் சங்கத்திலே எந்த விலைக்கு விற்கப்படுகிறதோ, அதே விலைக்குத்தான் வாங்கவேண்டும் என்று சொல்லப்பட்டு, இன்று பட்டு நூல் ஒரு கிலோ 1,300 ரூபாய்க்கும், பட்டுக் கூடு ஒரு கிலோ 150 ரூபாய்க்கும் அங்கே தனியார் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் இதை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கொள்முதல் செய்யவேண்டும் என்று விரும்புவாரேயானால் அவர்களே ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அங்கே உருவாக்கிக்கொண்டால் அதன்மூலம் அவர்கள் கொள்முதல் செய்வதற்கு அரசாங்கம் எல்லாவிதமான உதவிகளையும் செய்து தரும்.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அரசு சார்பில் நடைபெறுகின்ற பட்டுக் கூடு விற்பனை மையத்திலே இடைத்தரகர்களுடைய ஆதிக்கம் தலை ஓங்கி, இன்றைக்கு விவசாயிகள் சரியான விலை பெறமுடியாத அளவுக்கு, அந்த இடைத்தரகர்களுடைய ஆதிக்கம் வந்துகொண்டிருக்கிறது.

2006 ஆகஸ்ட் 8]

உதாரணமாக இன்றைக்கு அந்த விற்பனை மையத்தில் இருக்கின்ற முன்னாள் முதலமைச்சருடைய படத்தை எடுத்துவிட்டு, இன்றைய முதலமைச்சருடைய படத்தை மாட்டுவதற்குக்கூட அனுமதி இல்லாமல் அங்கே அதிகாரிகள் திணறிக் கொண்டிருக்கிறார்கள் என்பது இதற்கு ஓர் உதாரணமாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதன்மீது நடவடிக்கை எடுப்பாரா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல பட்டு நூல் கொள்முதல் செய்வதிலே ஏதாவது பிரச்சினை இருக்குமானால் அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். படம் மாட்டுவதைப் பற்றி இங்கே சொன்னார்கள், அது குறித்து உரிய நடவடிக்கை எந்த முறையிலே எப்படி எடுக்க வேண்டுமோ அப்படி அரசாங்கம் அந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளும்.

முற்பகல் 9–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலும் பட்டு உற்பத்தி அதிகரித்து வருகிறது. இதை விற்பதற்கு பெங்களூர் நகரம் நோக்கிச் செல்ல வேண்டியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதைப்போல, தருமபுரியில் மிகவும் குறைவாக வாங்குகிறார்கள் என்ற புகார் இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, தருமபுரியிலே ஒரு விற்பனை வளாகத்தை அரசு ஏற்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கர்நாடகா மாநிலத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. காஞ்சிபுரத்திலேயே TANSILK என்ற நிறுவனம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அங்கேயே கொண்டுபோய் விற்கலாம். நியாயமான விலைக்கு தரமான பட்டு அங்கே கொள்முதல் செய்யப்படுகிறது. நான் ஏற்கெனவே சொல்லியதைப்போல, மாண்புமிகு உறுப்பினர்கள் யாராவது தாங்கள் வசிக்கின்ற பகுதியிலே பட்டு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது;

நூல்கள் கொள்முதல் செய்யப்பட வேண்டுமென்றால், அவர்களே அங்கே ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்திக்கொண்டால், அதற்கு அரசு அத்தனை உதவிகளையும் செய்யும் என்று தெரிவித்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான ஜவ்வாது மலையிலே, புங்கம்பட்டு நாட்டிலே, அந்த மலைக் கிராமத்திலே, 100 ஏக்கர் பரப்பளவிலே பட்டுக் கூடு உற்பத்தி மையம் இயங்கி வந்தது. இப்போது மழை இல்லாத காரணத்தினாலே அங்கே பட்டு உற்பத்தி என்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. அங்கே கட்டிக்கொடுக்கப்பட்ட குடியிருப்புகள் மற்றும் கிடங்குகள் எல்லாம் வீணாக, இன்றைக்கு சிதிலமடைந்து கொண்டிருக்கின்றன. அந்த நிலங்களில் இப்போது முட்புதர்கள் வளர்ந்துகொண்டிருக்கின்றன. நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் தருகிற திட்டத்தின்கீழ், அந்த 100 ஏக்கரை, 50 மலை வாழ் மக்களுக்குப் பிரித்துத்தர நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி எங்கே நீர்ப் பற்றாக்குறை இருக்கிறதோ அந்த இடங்களிலேயெல்லாம் பட்டு உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டுமென்றும், பட்டுக் கூடுகள் அதிகமாக உற்பத்தி செய்ய மலைப்பகுதிகளிலே இருக்கக்கூடிய ஏழையெளியவர்களுக்கு உதவ வேண்டுமென்றும் மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும், இரண்டும் சேர்ந்து, சொட்டு நீர்ப் பாசன முறையை அமல்படுத்துவதற்காக, 100 per cent. 100 சதவீதம் மானியம் கொடுப்பது என்று முடிவெடுத்து, மத்திய அரசாங்கம் 50 சதவீதமும், மாநில அரசாங்கம் 50 சதவீதமும் சொட்டு நீர்ப் பாசனத்திற்காக உதவி செய்து வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அந்த 100 ஏக்கர் நிலத்திலேயும் சொட்டு நீர்ப் பாசனத்தின் மூலமாக பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மொத்தம் எவ்வளவு பட்டு நூல் உற்பத்தியாகிறது?

2006 ஆகஸ்ட் 8]

அது எந்தெந்த மாவட்டங்களிலே அதிகளவு உற்பத்தி செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு நூலினுடைய உற்பத்தி ஒவ்வொரு ஆண்டிற்கும் வித்தியாசப்படுகிறது. ஆனால், பட்டு நூல் சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோவை, வேலூர் போன்ற மாவட்டங்களிலே அதிகமாக உற்பத்தியாகிறது. இன்னும் சில மாவட்டங்களிலே இப்போது புதிதாக ஏழையெளியவர்கள் பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்வதிலே ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 12, திரு. நா. இராமகிருஷ்ணன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

12—

பேருந்து வசதி

*__32—திரு. நா. இராமகிருஷ்ணன்:__

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதியில் உள்ள மேகமலைக்குக் கூடுதலாகப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திண்டுக்கல் மூலம் கம்பம், சின்னமனூர், தேனி ஆகிய இடங்களிலிருந்து மேகமலைக்கு 12 தனி நடைகளும், தனியார் பேருந்துகள்மூலம் 4 தனி நடைகளும் இயக்கப்படுகின்றன. இந்நடைகளில் பயணிகள் விழுக்காடு மிகவும் குறைவாக உள்ளது. எனவே, கூடுதலாகப் பேருந்துகள் இயக்க அவசியமில்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேகமலை பகுதி என்பது முற்றிலும் தேயிலைத் தோட்ட விவசாயிகள் நிறைந்த பகுதி. 6,000—க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இங்கே பணிசெய்து வருகின்றார்கள். அந்த மேகமலைப் பகுதிக்குச்